## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**அறிவிப்பு எண்.அ1/1236/2025** **நாள் : 29.12.2025**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடம் **SC(A)/W/DW** என்ற இனசுழற்சி முறையில் நிரப்புவதற்கான அறிவிக்கை அறிவிப்பு எண்.அ1/1236/2025, நாள்.30.08.2025—ன் மூலம் வெளியிடப்பட்டு இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. இந்நிலையில் **SC(A)/W/DW** என்ற இன சுழற்சியின் கீழ் தகுதியான விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால், **SC(A)/W** என்ற இனசுழற்சி முறையில் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை நிரப்புவதற்கான அறிவிக்கை அறிவிப்பு எண்.அ1/1236/2025, நாள்.05.11.2025—ன் மூலம் வெளியிடப்பட்டு நேரடியாக / அஞ்சல் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, **SC(A)/W** என்ற இன சுழற்சியின் கீழ் தகுதியான நபர்களின் விண்ணப்பங்கள் பெறப்படாததால், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பெயர் பட்டியலின் படி நேர்காணல் மற்றும் திறன் தேர்வுகளில் கலந்து கொள்ள அழைப்பாணை அனுப்பப்பட்டு எவரும் கலந்து கொள்ளவில்லை.

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 26 மற்றும் 27—ன்படி முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு **SC(A)/GENERAL** எனும் இனசுழற்சியில் தகுதியான நபர்களிடமிருந்து 30.12.2025 முதல் 14.01.2026 வரை நேரடியாக / அஞ்சல் வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன்றன.

| | பொருள் | ஈப்பு ஓட்டுநர் |
|---|---|---|
| 1. | ஊதியம் | ரூ.19500—71900(Level-8) |
| 2. | வயது (01.07.2025 அன்று) | 18—42 |
| 3. | 01.07.2025 அன்று அதிக பட்ச வயது வரம்பு | 42 |
| 4. | மொத்த பணியிடங்கள் | 1 |
| 5. | இன சுழற்சி விவரங்கள் | SC(A)/ GENERAL - பட்டியல் சாதியின அருந்ததியர் (பொது பிரிவினர்) |
| 6. | கல்வி தகுதி மற்றும் பிற தகுதிகள் | ➢ 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>➢ செல்லதக்க ஓட்டுநர் உரிமம்<br>➢ 5 ஆண்டுகள் முன் அனுபவம் |
| 7. | விண்ணப்ப படிவம் | விண்ணப்ப படிவம் https://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |

| | | |
|---|---|---|
| 8. | விண்ணப்ப கட்டணம் | **The Block Development Officer, Panchayat Union, Mugaiyur** என்ற பெயரில் ரூ.50/—க்கான வங்கி வரைவினை (**DD**) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |
| 9. | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | 30.12.2025 முதல் 14.01.2026 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழி மூலமாகவோ முகையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அளித்திடலாம். |
| 10. | விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள் | 14.01.2026 அன்று மாலை 5.45 வரை |
| 11. | விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றிய அலுவலகம், முகையூர்(இ)மணம்பூண்டி, **Pincode:**605759. |

நிபந்தனைகள்

- தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் **https://viluppuram.nic.in** என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், முன் அனுபவச் சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.
- நிர்ணயிக்கப்பட்டுள்ள இனசுழற்சி, வயது. முன் அனுபவம் மற்றும் கல்விதகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
- தகுதியில்லா விண்ணப்பங்கள் மற்றும் காலக்கெடு முடிவுற்று பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின்படியே பணிநியமனம் மேற்கொள்ளப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தகுதி திறன் தேர்வு குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

29/12

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
முகையூர்.

29/12/25